## கிராமப்புற வங்கி முறையை வலுப்படுத்தியதில்

# நபார்டு வங்கியின் பங்கு மிக முக்கியமானது!

## 43வது நிறுவன தின விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெருமிதம்!

சென்னை, ஜுலை 19-

கூட்டுறவு அமைப்பு முறை மற்றும் கிராமப்புற வங்கி முறையை வலுப்படுத்தியதில் நபார்டு வங்கியின் பங்கு மிக முக்கியமானது என நபார்டு வங்கியின் 43வது நிறுவன தினக் கொண்டாட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் பெருமிதத்துடன் கூறினார்.



தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) 43வது நிறுவன தினக் கொண்டாட்டம் சென்னை, எழும்பூர், ஹோட்டல் அம்பாசிட்டர் பல்லவாவில் நேற்று (18.07.2024) நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் பேசும்போது தெரிவித்ததாவது:-

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) 43வது நிறுவன தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், இந்த அருமையான தருணத்தில் தமிழக அரசின் சார்பிலும், முதலமைச்சர் தளபதி அவர்களின் சார்பிலும், நபார்டு வங்கி, தமிழ்நாடு மண்டல அலுவலகத்தின் முதன்மை பொது மேலாளர் ஆர்.ஆனந்த் மற்றும் நபார்டு வங்கி குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு, 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பயணித்து வெற்றிநடைபோட்டு வருகிறது நபார்டு வங்கி. 1980களில் இருந்த கிராமப்புற கடன் அமைப்பின் குறைகளை நபார்டு வங்கி நிவர்த்தி செய்து, கூட்டுறவு அமைப்பு முறை மற்றும் கிராமப்புற வங்கி முறையை வலுப்படுத்தியதில் நபார்டு வங்கியின் பங்கு மிக முக்கியமானது.

### கிராமப்புற மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியது!

கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிராந்திய கிராமப்புற வங்கிகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

நபார்டு வங்கியானது, கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிராந்திய கிராமப்புற வங்கிகளுக்கு மறுநிதியளிப்புக்கு உதவியது மட்டுமில்லாமல், நிர்வாகத்தை மேம்படுத்தவும், மனிதவளத்தை வலுப்படுத்தவும், தொழில்நுட்பத்தை பின்பற்றவும், வணிக தயாரிப்புகளை மேம்படுத்தவும் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்கவும் பல ஊக்குவிப்பு மானியங்களை வழங்கியது.

மைக்ரோ ஏடிஎம்கள், PoS என்கிற விற்பனை புள்ளி இயந்திரங்கள், மொபைல் வேன்கள், ஃபின்டெக் வசதி, கிராமப்புறங்களில் நிதி விழிப்புணர்வு முகாம்கள், வணிக முகவர்கள் வசதி, கூட்டுறவு பயிற்சி நிறுவனங்கள் மூலம் கூட்டுறவு ஊழியர்களுக்கு பயிற்சி என தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு நபார்டு நிதியுதவி வழங்கி வருகிறது.

தமிழகத்தில் நடைபெற்று வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் கணினிமயமாக்கல் திட்டத்தில் நபார்டு வங்கி ஆற்றிய பங்கினை இந்த தருணத்தின் நான் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

4454 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை ரூ.195 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. இது அவற்றின் செயல்திறனை அதிகரிக்கும் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில மற்றும் ஒன்றிய அரசின் உதவிக்கு மேல், நபார்டு வங்கியின் மானியம் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது எனக்கூறினால் அது மிகையாகாது.

### முதன்மைத் திட்டம்!

நபார்டு வங்கியின் முதன்மை பொது மேலாளர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளபடி, சுய உதவிக் குழு (SHG)வங்கி இணைப்புத் திட்டம், உழவர் கடன் அட்டை (KCC) திட்டம், நீர்நிலைத் திட்டங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் மற்றும் பண்ணைக்கு வெளியே உற்பத்தியாளர்களை ஒன்றிணைத்தல் மற்றும் பண்ணைக்கு வெளியே உள்ள உற்பத்தியாளர்கள் அமைப்புகள் (OFPOs) என்பது நபார்டு வங்கியின் முதன்மைத் திட்டமாகும்.

இது விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் துறையின் மேம்பாட்டிற்கு ஒரு மைல்கல் திட்டமாகும், இத்திட்டம் விவசாயிகள் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கையை மாற்றியுள்ளது.

கிராமப்புற உள்கட்டமைப்பை உருவாக்குவது வளர்ச்சியின் முக்கிய தேவைகளில் ஒன்றாகும். தமிழகத்தில் கிராமப்புற சாலைகள், பாலங்கள், நீர்ப்பாசனம், பள்ளி, கல்லூரிகள், பழங்குடியின மக்களுக்கான விடுதிகள், கால்நடை மருத்துவமனைகள் போன்றவற்றில் திட்டங்களை நடைமுறைப்படுத்த நபார்டு வங்கி இதுவரை சுமார் ரூ.36,000 கோடி நிதி ஒதுக்கியுள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

### முதல்வரின் இலக்கு!

நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு ஆகும். முதலமைச்சர் தளபதி அவர்கள், தமிழ்நாடு 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற இலக்கு நிர்ணயித்துள்ளார்கள். இவ்விலக்கை அடைவதற்கு தெளிவான வியூகம் வகுத்துள்ளோம். இவ்வளர்ச்சிப் பாதையில், சாத்தியமான அனைத்துத் துறைகளிலும், வழிகளிலும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட நபார்டு வங்கிக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் சாதகமான உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், சென்னையின் நெரிசலைக் குறைப்பது தொலைநோக்குப் பார்வையின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். இத்தருணத்தில் நபார்டு வங்கியின் ஒரு பெரிய பங்களிப்பை நான் காண்கிறேன், மேலும் இவ்வினத்தில் சாத்தியமான பங்களிப்பினை மேற்கொள்ளவுள்ள வாய்ப்புகளை ஆராயுமாறு நபார்டு வங்கியை கேட்டுக்கொள்கிறேன்.

இன்று உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் (FPOs) ஒரு மைல்கல்லாக மாற்றும் வணிக மாதிரியாகக் கருதப்படுகிறது. இது இறுதியில் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துகிறது.

மேலும், இளைய தலைமுறையினருக்கு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகளை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளது. பல உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மிகவும் வெற்றிகரமாக இருந்தாலும், உற்பத்தியாளர்களிடையே உரிமையின்மை உணர்வு, மோசமான வணிகத் திறன்கள் மற்றும் பலவீனமான நிர்வாகம் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் கணிசமான FPOக்கள் உள்ளன.

### தமிழ்நாடு அரசுடன் கைகோர்த்திடுவீர்!

எனவே, இந்த FPOக்களை நிதி ரீதியாக லாபகரமானதாக மாற்ற, அதிக ஆதரவு மற்றும் உதவிக்கரம் தேவை.

இத்திசையில், தொழில்நுட்பம், மின்வணிகம், பிற வளர்ந்து வரும் தொழில்நுட்ப தீர்வுகள், திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் உயிரோட்டம் பெற்று, புதிய கண்டுபிடிப்புகளுக்கான மாதிரிகளை கொண்டு வருவதற்கு தமிழக அரசுடன் கைகோர்க்க நபார்டு வங்கியைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 43 ஆண்டுகால பயணத்தில், நபார்டு வங்கி, வேளாண்மை மற்றும் கூட்டுறவு ஆகியவை பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டன. மாறிவரும் பொருளாதாரச் சூழல் மற்றும் பருவநிலை மாற்ற விளைவுகளில், விவசாயிகள், குறிப்பாக குறு விவசாயிகள், கிராமப்புறப் பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்படும் நிலையில், நபார்டு வங்கியின் பங்கு மிகவும் முக்கியமானது ஆகும்.

மாநிலத்திற்கும், இந்தியாவிற்கும் சாத்தியமான மற்றும் நிலையான தீர்வுகளைக் கண்டறிய நபார்டு வங்கி அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று நான் முழுமையாக நம்புகிறேன். கிராமப்புற பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் பயனுள்ள, அர்த்தமுள்ள மற்றும் வெற்றிகரமான பயணத்தை நோக்கிய இந்த முயற்சியில் நபார்டு வங்கியின் முதன்மை பொது மேலாளர் ஆர்.ஆனந்த், மற்றும் நபார்டு வங்கி குடும்பத்தினரை நான் மனதார வாழ்த்துகிறேன்.

இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் என்னை அழைத்து வாய்ப்பளித்த நபார்டு வங்கிக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்..

முன்னதாக நிகழ்ச்சியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

பின்னர் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு பாராட்டு கேடயங்களையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் முதன்மை பொது மேலாளர் ஆர்.ஆனந்த், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன் ஆர்பிஐ மண்டல இயக்குநர் திரு.உமாசங்கர், நபார்டு வங்கியின் பொது மேலாளர் திருமதி.ஜோதிஸ்ரீநிவாஸ் உட்பட நபார்டு வங்கி உயர் அலுவலர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் ம.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற துரை. வைகோ, சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் தலைமையில் புதுக்கோட்டை நகர் முழுவதும் வீதி வீதியாகச் சென்று மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், கழக மூத்த முன்னோடிகளும், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக, வட்டக் கழக நிர்வாகிகளும், கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## தமிழர் வரலாற்றில்

# அழிக்கவே முடியாத பண்பாட்டுத்திருநாள்!

## ‘தமிழ்நாடு நாள்’ குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 19-

“தமிழர் வரலாற்றில் அழிக்கவே முடியாத பண்பாட்டுத் திருநாள்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “தமிழ்நாடு நாள்” குறித்து தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



**தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களால் நமது மாநிலத்துக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப்பட்ட பொன்னாள் இன்று. தமிழர் வரலாற்றில் அழிக்கவே முடியாத பண்பாட்டுத் திருநாள். “தமிழ்நாடு” என்று நமது அண்ணா மூன்று முறை முழங்க, “வாழ்க” முழக்கத்தால் சட்டப்பேரவை அதிர்ந்த நாள்.**

**இந்தியாவில் மட்டுமல்ல; உலக அளவில் நமக்கென தனி அடையாளம் உண்டான உணர்ச்சிமிகு வரலாறு அது. நவீனச் சிந்தனைகளால் வளர்ச்சிப் பாதையில் புதுப் பாய்ச்சலைத் தொடங்கிய நமது தமிழ்நாட்டை எந்தப் பிற்போக்குச் சக்தியாலும் இன்றளவும் தடுக்க முடியவில்லை. இனியும் முடியாது.**

**ஆதிக்கம் எந்த வடிவில் வந்தாலும் எதிர்ப்போம். திராவிட நாயகர் நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அன்னைத் தமிழ் நாட்டின் உரிமைகளைக் காப்போம்.**

**நாமும் முழங்குவோம்!**

**வாழ்க தமிழ்நாடு!**

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.20 லட்சம் மதிப்பில்

# விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள் - நிதி உதவி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 19-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பாக ரூ.20 லட்சம் மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள், உயர்தர பயிற்சி பெற காசோலை வழங்கி, வீராங்கனைகள் ஸ்னூக்கர் அனுபமா, வாள்வீச்சு மரியா அக்ஷிதா ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு அளவிலான சைக்கிள் போட்டியில் பங்கேற்க தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய சைக்கிள் வீரர் பிரதீப் சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பாக ரூ.16 இலட்சம் மதிப்பிலான சர்வதேச தரத்திலான சைக்கிளையும், தமிழ்நாட்டை சேர்ந்த தேசிய வில்வித்தை வீராங்கனை கண்மணி அவர்களுக்கு போட்டிகளில் பங்கேற்க ரூ.2.8 இலட்சம் மதிப்பிலான சர்வதேச தரத்திலான வில்வித்தை உபகரணத்தையும், உலக பார்வையற்றவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற மகாராஜா அவர்களுக்கு அமெரிக்காவில் உயர்தர பயிற்சி பெற ரூ.1.20 இலட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

மேலும், அமைச்சர் அவர்கள் ஆசிய பெண்கள் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் 2024-ல் தங்கப்பதக்கம் வென்ற வீராங்கனை செல்வி அனுபமா, ஆசிய ஃபென்சிங் கான்ஃபெடரேஷன் ஆணையத்தின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியரான வாள்வீச்சு வீராங்கனை மரியா அக்ஷிதா அவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தார்.

## தமிழ்நாட்டில் புதிய மாநகராட்சிகள் உருவாக்குதல் உள்ளிட்ட

# 4 சட்டதிருத்த மசோதாக்களுக்கு ஒப்புதல்!

## ஆளுநர் ஆர்.என். ரவி வழங்கினார்!

சென்னை,ஜுலை.19-

புதிய மாநகராட்சிகள் உருவாக்க வருவாய் மற்றும் மக்கள் தொகை வரம்புகளை குறைத்தல், சென்னையில் கழிவுநீர் இணைப்பை கட்டாயமாக்குதல், சென்னை காவல் சட்டத்தை மற்ற நகரங்களுக்கும் விரிவாக்கம் செய்தல் உள்ளிட்ட 4 சட்டத்திருத்த மசோதாக்களுக்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, நாமக்கல் மற்றும் காரைக்குடி மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கு, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த மக்கள் தொகை, வருமான அளவுகளை குறைத்து மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான நகர்ப்புற உள்ளாட்சி திருத்த சட்டமசோதா தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சி சட்டப்பிரிவில் மக்கள் தொகையாக இருந்த 3 லட்சம் என்பது 2 லட்சமாகவும், சம்பந்தப்பட்ட பகுதியின் ஆண்டு வருமானம் ரூ.30 கோடியில் இருந்து ரூ.20 கோடியாகவும் குறைக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது.

மேலும், ஊரக உள்ளாட்சிகளை, நகர்ப்புற உள்ளாட்சிகளுடன் இணைக்கும் போது அப்பகுதியில் வரும் சொத்துக்கள் உள்ளிட்டவற்றை மாற்றம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

அதே போல், சென்னையில், தனியார் வளாகம் அல்லது ஒரு தனியார் தெருவின் மிக அருகில் உள்ள இடத்தில் இருந்து 30 மீட்டர் தூரத்துக்குள், வாரியத்தின் கழிவுநீர்ப்பாதை இருக்குமானால், அந்த வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், தனியார் தெருவின் உரிமையாளர், கழிவுநீரை வாரியத்தின் கழிவுநீர்ப்பாதையில் வெளியேற்றுவதற்காக இணைப்பு பெறுவதை கட்டாயமாக்கும் வகையில் சென்னை குடிநீர் வாரிய விதிகளில் திருத்தம் செய்வதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், சென்னை மாநகர காவல் சட்டத்தை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய நகரங்களுக்கும் விரிவாக்கம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதாவும் நிறைவேற்றப்பட்டன.

இந்த மசோதாக்கள் ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன.

இந்நிலையில், இந்த மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். இதையடுத்து, இந்த சட்டத்திருத்தங்கள் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 21 புதிய பேருந்துகளை தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கல்பனா செந்தில், விஷ்ணு பிரபு, மாலதி எம்.சி., கணபதி லோகு, எ.எம்.கிருஷ்ணராஜ், இரா.வெற்றிச்செல்வன், தெய்வயானை, எல்.பி.எப். பெரியசாமி, துரைசாமி, கணேசன், கண்ணன், பிரவீன் எம்.சி., சிவகுமார், குமார், வைரமுருகன் எம்.சி.,டவுன்பா.ஆனந்த், புகழேந்தி, ரகுதுரைராஜ், தியாகு,LPF தொழிற் சங்க நிர்வாகிகள், அரசு போக்குவரத்து தொழிலாளர்கள், கழகத்தொண்டர்கள், கழக செயல்வீரர்கள் கலந்துகொண்டனர்.